மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 142/2019**

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07-ஆம் தேதி வியாழக்கிழமை

வா.சா.3 ( மாரி )

கு.வி (3 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில்)

நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வந்ததா என்றால் அழைப்பாணை வரவில்லை, வாதி கேட்டதற்கிணங்க சாட்சி அளிக்கிறேன். மோகன் என்பவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். மோகன் என்பவர் யார் என்றால் பொன்னுத்தாய் என்பவரின் மகன். அம்மனி என்ற பொட்டையம்மா என்பவருக்காக இவ்வழக்கில் சட்சி அளிக்க வந்தேன். இந்த வழக்கு யார் தாக்கல் செய்தார், யார் மீது தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் பொன்னத்தாள் வழக்கு தாக்கல் செய்தார், பொட்டையம்மாள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பொட்டையம்மாள் மற்றொரு பெயர் அம்மினி. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் சொத்துக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம்கோரி வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் கண்ணுச்சாமிக்கு பாத்தியம். கண்ணுச்சாமி உயிருடன் இருக்கும் போதே பிரித்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் கூலி வேலைக்கு சென்ற சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை அம்மனியம்மாள் மற்றும் பொன்னம்மாள் இருவரும் பொதுவில் வைத்து அனுபவித்து வந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்து யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அம்மனியம்மாளுக்கு கண்ணுச்சாமி சில சொத்துக்களை பிரித்து கொடுத்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர் போலீசில் வேலை பாாத்து வருவதால் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றி கொண்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பட்டா மாற்றுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் போலீஸ் மூலம் நடைபெறாது வருவாய்துறையில் தான்

நடைபெறும் என்றால் சரிதான். கண்ணுச்சாமியின் வாரிசுகள் விபரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பெண் பிள்ளைகள், அம்மனியம்மாள் மற்றும் பொட்டையம்மாள். பொட்டையம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள். அவர்கள் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. கண்ணுச்சாமியின் குடும்பம் பற்றியோ, அவரது பிள்ளைகள் பற்றியோ, அவர்கள் சொத்துக்கள் பற்றிய விபரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. கண்ணுச்சாமி தான் உயிருடன் இருக்கும் காலத்திலே தனது பிள்ளைகளுக்கு பிரித்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தனிதனியே பட்டா பெற்று தனிதனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் 3 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை